[1994 ஜனவரி 3

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்:

விடை--

(அ) இல்லை

(ஆ) கேள்விக்கு இடமில்லை

133-

அரசு பொறியியல் கல்லூரிகளில் கல்விக் கட்டணத்தை உயர்த்துதல்

*10862-**திரு. வி. கே. லட்சுமணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) அரசு பொறியியல் கல்லூரிகளில் மாணவர்கள் கல்விக் கட்டணத்தை உயர்த்த அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எந்தக் கல்வியாண்டிலிருந்து உயர்த்தப்படும்?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

விடை--

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண்.738, கல்வி, நாள் 2.8.93-ல் அரசு /அரசு நிதி உதவி பெறும் பொறியியற் கல்லூரிகளில் 1993-94ம் கல்வி ஆண்டிலிருந்து கல்விக் கட்டணத்தை ரூ. 2000/-- ஆக அரசு உயர்த்தியுள்ளது.

138-

புதுக்கோட்டை பிரகதாம்பாள் கோவிலுக்குச் சொந்தமான இடங்களில் கட்டிடம் கட்டுதல்

*15298-**திரு. சி. சுவாமிநாதன்:** மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

புதுக்கோட்டை பிரகதாம்பாள் கோவிலுக்குச் சொந்தமான காலி மனையிடங்களில் அரசு செலவில் கட்டிடங்கள் கட்டி வாடகைக்கு விட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர்:

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1994 ஜனவரி 3]

விடை--

மேற்படி திருக்கோயிலில் கட்டிடங்கள் கட்டி வாடகைக்கு விடும் நிலையில் காலியிடங்கள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. கேள்வி நேரத்தின்போது வேறு பிரச்சினை எழுப்பப்படக்கூடாது என்பது குறித்தும் ஆளுநர் உரையுடன் கூட்டம் தொடங்க வேண்டுமென்ற கோரிக்கை குறித்தும்-பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) நான் சொல்லிய பிறகு நீங்கள் பேசலாம். (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன். கேள்வி நேரத்தில் இங்கே விரும்பத்தகாத முறையில் சிலர் கூச்சல் எழுப்பி வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள். கேள்வி நேரத்தில் எழுந்து எதிர்க்கட்சித் தலைவர், எனக்கு எந்த முன்னறிவிப்பும் கொடுக்காமல் திடீரென்று பேச ஆரம்பித்தார். கேள்வி நேரத்தின்போது வேறுவகையான தீர்மானங்கள் நிறைவேற, கேள்வி நேரம் வேண்டாம் என்று முடிவு எடுத்தாலன்றி கேள்வி நேரத்தின்போது வேறு எந்தப் பிரச்சினையையும் எழுப்பலாகாது என்று நான் திரும்பத் திரும்ப சொல்லியதைக் கேட்காமல் விதிமுறைகளுக்கு முற்றிலும் மாறாக அவர் நடந்து கொண்டார். நடந்துகொண்டு அவர் பேசிய காரணத்தினாலேதான் அவர் பேசிய எதுவும் அவைக்குறிப்பிலே ஏறாது என்று அறிவித்திருந்தேன். பேரவை விதி *32* "......The first hour of every sitting shall, unless the House unanimously resolves otherwise, be available for the asking and answering of questions". பேரவையிலே ஒரு தீர்மானம் முன்மொழிந்து, அதுகூட ஏகமனதாக நிறைவேறினால்தான் கேள்வி நேரம் இல்லாத ஒரு முறையைப் பின்பற்ற முடியும். பேரவைத் தலைவரே கூட– "The Speaker may, in his discretion, extend the time of question hour". நான் இப்பொழுது செய்கிறேனே–இந்தக் கேள்வி நேரத்தை வேண்டுமானால் நீட்டிக்கலாமே தவிர, என்னுடைய அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி இஷ்டத்திற்குத் தள்ளுபடி செய்துவிட முடியாது என்று அவ்வளவு